## தேவிஸ்ரீ பத்ரகாளியம்மன் ஆலயத்திற்கு எதிராக

# சட்ட நடவடிக்கை எடுக்காததற்கு அமைச்சர் காரணமல்ல

## ஜேக்கல் நிறுவனம் விளக்கம்



கோலாலம்பூர், மார்ச் 29-

தற்போதைய இடத்திலிருந்து மாற்றுப் பகுதிக்குச் செல்வது தொடர்பில் ஜாலான் மஸ்ஜிட் இந்தியா தேவிஸ்ரீ பத்ரகாளியம்மன் ஆலயத்திற்கு எதிராக சட்ட நடவடிக்கை எடுப்பதில்லை என்ற முடிவு தன்னுடையது. இதில் கூட்டரசுப் பிரதேச அமைச்சர் டத்தோஸ்ரீ டாக்டர் ஸலிஹா முஸ்தாபாவைக் குற்றம் சொல்ல வேண்டாம் என்று அந்த நிலத்தின் உரிமையாளரான ஜேக்கல் டிரேடிங் நிறுவனம் நேற்றுத் தெளிவுபடுத்தியது.

இந்த விவகாரத்தில் சட்டம், சமூக சிக்கல்கள் குறித்த தன்னுடைய கருத்துகளை மட்டுமே டாக்டர் ஸலிஹா பகிர்ந்து கொண்டார். இதனையாரும் தவறாக அர்த்தம் கொண்டு வியாக்கியானம் செய்ய வேண்டாம் என்று அந்நிறுவனம் கேட்டுக்கொண்டது. தேவிஸ்ரீ பத்ரகாளியம்மன் ஆலயத்திற்கு எதிராக சட்ட நடவடிக்கை எடுப்பதற்கு தங்கள் நிறுவனத்தை யாரும் தடுக்கவில்லை. சட்ட நடவடிக்கை எடுக்க வேண்டாம் என்பது நிறுவனத்தின் சொந்த முடிவு என்று ஜேக்கல் நிறுவனத்தின் நிர்வாக இயக்குநர் டத்தோஸ்ரீ முகமட் ஃபாரோஸ் முகமட் ஜேக்கல் ஓர் அறிக்கையில் தெளிவுபடுத்தி இருக்கிறார்.

தங்களுடைய சட்ட ஆலோசகர்களின் ஆலோசனைகள் மேலும் இவ்விவகாரத்ததில் சம்பந்தப்பட்டவர்கள் ஆகியோரின் பரிந்துரைகளைக் கவனத்தில் கொண்டு அமைதியான மேலும் சுமுகமான முடிவு எடுக்கப்பட்டதாக அவர் குறிப்பிட்டார். சம்பந்தப்பட்ட அமைப்புகள் ஆலோசனை வழங்கின. இவ்விவகாரத்தில் ஏற்படக்கூடிய சட்ட மேலும் சமூகச் சிக்கல்கள் குறித்து டாக்டர் ஸலிஹா முன்வைத்த கருத்துகள் ஆகியவற்றின் அடிப்படையில் சுதந்திரமான முறையில் இந்த முடிவு எடுக்கப்பட்டது. ஆனால் சில தரப்பினர் டாக்டர் ஸலிஹா மீது தங்களின் சினத்தைக் காட்டி வருகின்றனர். இந்தப் பிரச்சினைக்கு சுமுகமான தீர்வு காண்பதற்கு அமைச்சர் முக்கியப் பங்காற்றி இருக்கின்ற நிலையில் அவரைக் குறை சொல்வது நியாயமே இல்லை. அவரின் தலையீட்டால் இன்று இங்கு அமைதி சூழ்ந்திருக்கிறது. அதனை மறந்து விடக்கூடாது. தவறான புரிதல்களையும் தேவையில்லாத கருத்துகளையும் இனியும் சொல்லிக் கொண்டிருக்க வேண்டாம் என்று ஃபாரோஸ் அந்த அறிக்கையில் கேட்டுக் கொண்டார். இந்த ஆலயம் இடம் மாறிச் செல்வதற்கு மறுத்து வந்த நிலையில் அதற்கு எதிராக சட்ட நடவடிக்கை எடுப்பதற்கு டாக்டர் ஸலிஹா தடையாக இருந்தார் என்பதில் துளியளவும் உண்மை இல்லை என்று ஃபாரோஸ் விளக்கமளித்தார். இதனிடையே தன்னுடைய நிலத்தில் மடானி பள்ளிவாசல் நிர்மாணிப்பதற்கு பிரதமர் டத்தோஸ்ரீ அன்வார் இப்ராஹிம் வியாழக்கிழமை அடிக்கல் நாட்டினார். தன்னுடைய நிலத்தில் வீற்றிருக்கும் தேவிஸ்ரீ பத்ரகாளியம்மன் ஆலயத்திற்கு அங்கிருந்து 50 மீட்டர் தொலைவில் மாற்று இடம் வழங்கப்பட்டிருக்கிறது. அதனை ஆலய நிர்வாகத்தினர் ஏற்றுக் கொண்டுவிட்டனர். புதிய இடத்தில் ஆலயம் கட்டி முடிக்கப்படும் வரை இந்த ஆலயம் அங்கேயே நிலைத்திருக்கும் என்பதையும் அவர் சுட்டிக் காட்டினார். சம்பந்தப்பட்ட நிலத்தை 2014ஆம் ஆண்டில் ஜேக்கல் டிரேடிங் நிறுவனம் கோலாலம்பூர் மாநகர் மன்றத்திடம் இருந்து வாங்கி விட்டது. ஆனால் இது குறித்து ஆலய நிர்வாகத்திற்குத் தகவல் சொல்லப்படவில்லை என்றும் கூறப்படுகிறது.